**அக்டோபர்: 12**

## கிறிஸ்து சிலுவையில் பேசிய இரண்டாம் வார்த்தை – இரட்சிப்பு

**வாசிக்க: லூக்கா 23:33-43**

கபாலஸ்தலம் என்று சொல்லப்பட்ட இடத்தில் அவர்கள் சேர்ந்தபொழுது, அங்கே அவரையும், அவருடைய வலதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும், அவருடைய இடதுபக்கத்தில் ஒரு குற்றவாளியையும் சிலுவைகளில் அறைந்தார்கள். அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். அன்றியும் சிலுவையில் அறையப்பட்டிருந்த குற்றவாளிகளில் ஒருவன்: நீ கிறிஸ்துவானால் உன்னையும் எங்களையும் இரட்சித்துக்கொள் என்று அவரை இகழ்ந்தான். மற்றவன் அவனை நோக்கி: நீ இந்த ஆக்கினைக்குட்பட்டவனாயிருந்தும் தேவனுக்குப் பயப்படுகிறதில்லையா?
நாமோ நியாயப்படி தண்டிக்கப்படுகிறோம், நாம் நடப்பித்தவைகளுக்குத்தக்க பலனை அடைகிறோம், இவரோ தகாததொன்றையும் நடப்பிக்கவில்லையே என்று அவனைக் கடிந்துகொண்டு, இயேசுவை நோக்கி: ஆண்டவரே, நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான். இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு நீ என்னுடனேகூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.




சரித்திரம் சொல்கிறார், நம் ஆண்டவரின் இருபுறமும் சிலுவையில் அறையப்பட்ட இரண்டு திருடர்களும், அநேக நாட்களாக கூட்டாளிகளாக சேர்ந்து தவறு செய்தவர்கள். அதாவது இருவரும் நண்பர்கள். அவர் தவறான காரியத்தை சேர்ந்த செய்ய அவர்களுக்கு வாய்ப்பு கிடைத்தது போலவே, கிறிஸ்துவின் சிலுவை மரணத்தை இருவரும் சேர்ந்தே பார்த்தனர். இயேசப்பா சிலுவை சுமந்தது, வீரர்களால் கொடூரமாக தாக்கப்பட்டது, பின்பு இழிவாக பேசியது முதல் ஆண்டவர் "பிதாவே இவர்களை மன்னியும் இவர்கள் செய்வது இன்னதென்று அறியாமல் செயகின்றனர்" என்று கூறியது வரை சேர்ந்தே பார்க்க வாய்ப்பு கிடைத்தது. ஆனால் இருவரில் ஒருவன் மனந்திரும்பி இயேசப்பாவிடம் ஜெபித்து அன்றே இரட்சிக்கப்பட்டான். மற்றவனோ அவரை நம்பாமல் இகழ்ந்து பேசி இரட்சிப்பை இழந்தான். நாம் எப்படிபட்டவர்களாக இருக்கிறோம்? அவருடைய வார்த்தையை நம்புகிறோமா...?

உங்களுக்கு நவமான இருதயத்தைக் கொடுத்து, உங்கள் உள்ளத்திலே புதிதான ஆவியைக் கட்டளையிட்டு, கல்லான இருதயத்தை உங்கள் மாம்சத்திலிருந்து எடுத்துப்போட்டு, சதையான இருதயத்தை உங்களுக்குக் கொடுப்பேன். எசேக்கியேல் 36:26

### ஜெபம்
பரிசுத்தமுள்ள எங்கள் தகப்பனே, இதோ என்னுடைய இருதயத்தை உங்க பாதத்தில் ஊற்றி ஜெபிக்கிறேன். கல்லான இடங்களை சதையை மாற்றி உம் வார்த்தைகளால் உருவாக்கும். இயேசுவின் மகிமையான நாமத்தில் ஜெபிக்கிறேன் நல்ல பிதாவே. ஆமென்.


INRI